**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். M.C.No.20/2017**

2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தமயந்தி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

எ.ம.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயச்சந்திரன் | தொழில் | : ரேடியோ சவுண்ட் |
| தந்தை பெயர் : | கண்ணன் | படிப்பு | : |
| கிராமம் | :செஞ்சி நகரம் | சமயம் | : |
| வட்டம் | : செஞ்சி | சாதி | : |
| | | வயது | : 63 |

**(மனுதாரர், எதிர்மனுதாரர் ஆஜர்)**

**குறுக்கு விசாரணை**

மலரும் ராஜாமணியும் கணவன் மனைவி என்றால் சரிதான். திருமணத்தின் பலனாக 3 வருடத்தில் தமிழ்செல்வன், சுதா என்ற 2 பிள்ளைகள் பிறந்தார்கள் என்றால் சரிதான். திருமணத்தின்போது தேவையான சீர்வரிசைகளை பெற்றோர்கள் செய்தார்கள் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு இருவரும் தாதிக்குளம் கிராமத்தில் தான் குடும்பம் நடத்தினார்கள் என்றால் சரிதான். ராஜாமணி செஞ்சியில் வியாபாரம் செய்து வந்தார் என்றால் அது பற்றி தெரியவில்லை. ராஜாமணிக்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் செஞ்சி சத்திர தெருவில் உள்ளேன் என்றால் சரிதான். ராஜாமணி-மலர் குடும்பம் தாதிக்குளத்தில் இருப்பதால் அவர்களது குடும்ப விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. செஞ்சியில் இருந்து தாதிகுளம் எவ்வளவு தூரம் என்றால் 10 கி.மீ. இருக்கும். தாதிக்குளம் நான் போனேனா என்றால் இல்லை. ராஜாமணி-மலர் குடும்பத்தில் என்ன பிரச்சனை என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ராஜாமணி அவரது குடும்பத்தோடு வசிக்காமல் தனியாக உள்ளார் என்றால் சரிதான். சுதாவுக்கு திருமணத்தை ராஜாமணி செய்து வைக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மலர் அவரது தாய் வீட்டு சொத்தை விற்பனை செய்ததாக சொல்லியுள்ள நிலையில் அது சம்மந்தமாக நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கேள்விதான் பட்டேன். ராஜாமணியின் தாயார் தமது மகனான ராஜாமணிக்கு எதிராக பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்தது தெரியுமா என்றால் தெரியாது.

ராஜாமணிக்கும் அவரது தயாருக்கும் சுமூக உறவு இல்லை என்று தெரியுமா என்றால் கேள்விப்பட்டேன். ராஜாமணியின் நடத்தை சரியில்லை என்பதால் அவரது தாயார் விட்டுவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. ராஜாமணியின் பிள்ளைகளை ராஜாமணியின் தாயார் தான் பராமரித்து வந்தார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. 2 பிள்ளைகள் பிறக்கும்வரையில் சுமூகமான உறவு நடத்தி வந்தார் என்றால் சரிதான். பிள்ளைகள் பிறந்த பிறகு ராஜாமணி மனைவியுடன் குடும்பம் நடத்தவில்லை என்றால் அவர்களுடைய கருத்து வேறுபாடு இருந்தது. குடும்ப பிரச்சனைக்கு பிறகு கடம்பூர் கிராமத்தை சேர்ந்த புஷ்பா என்ற பெண்ணுடன் ராஜாமணி திருமணம் செய்து கொண்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது சம்மந்தமாக என்ன தெரியும் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ஒருமுறை ராஜாமணியுடன் வளத்தி காவல் நிலையம் சென்றேன். மலருக்கு பராமரிப்பு தொகை என்று எதுவும் ராஜாமணி தருவதில்லை என்றால் தெரியவில்லை. மலருக்கு வருமானம் எதுவும் கிடையாது என்றால் வட்டிக்கு விடுவதாக கேள்விப்பட்டேன். வேறு வருமானம் பற்றி தெரியாது. வட்டிக்கு விடுவதாக யார் என்னிடம் சொன்னது என்றால் டீக்கடையில் பேசிக்கொண்டார்கள். தற்போது என்ன வருமானம் வருகிறது என்று தெரியுமா என்றால் தெரியாது. வட்டிக்கு யார் யாரிடம் எவ்வளவு தொகை கொடுத்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மலர் சென்னை சென்று சில நாட்கள் கூலி வேலைக்கு சென்றார் என்றால் அது தெரியாது. தாதிக்குளத்தில் தற்போது தனியாக மலர் வசிக்கிறார் என்றால் அது தெரியாது. மலருக்கு அவரது கணவர் ராஜாமணி பராமரிப்பு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான். ராஜாமணியின் நட்பு என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.